முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர்கள் கழகம்

## AA2 பரீட்சை – 2019 சனவரி

## (AA26) வியாபார முகாமையும் தந்திரோபாயமும்

(Business management and strategy)

2019-01-27
பிற்பகல்
[1.45 – 5.00]

பக்கங்கள் : 06
வினாக்கள் : 10

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட நேரம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலம்*

(2) ***சகல வினாக்களுக்கும் விடையளிக்குக.***

(3) ***விடைகள்*** *உங்களுக்குத் தரப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியில்*** *எழுதப்படுதல் வேண்டும்.*

(4) *உங்களால் ஏதாவது எடுகோள்கள் எடுக்கப்பட்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *வரைவிலக்கணங்களுடன்கூடிய* ***செயல் வினைச்சொல் நிரல்*** *இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்களைத் தவிர ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச்சொல்லைக்*** *கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் நிரலில் தரப்பட்ட வினைச்சொல்* ***வரைவிலக்கணத்தை*** *அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(6) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

பத்து (10) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 20 புள்ளிகள்)

**வினா 01**

*இல. **1.1** தொடக்கம் **1.5** வரையான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்க. தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கத்தை எழுதி அதன் எதிரே எழுதுக.*

**1.1** பின்வருவனவற்றுள் 21 ஆம் நூற்றாண்டில் முகாமையாளர்கள் எதிர்கொள்கின்ற சவாலாக இருப்பது எது?

(1) வேலைப்படையின் பல்லினத்தன்மை
(2) தகவல் தொழில்நுட்பம்
(3) பூகோளமயமாதல்
(4) மேலுள்ள சகலதும்

**1.2** பின்வருவனவற்றுள் றொபேட் கட்ஸ் (Robert Katz) இனால் அறிமுகப்படுத்தப்பட்ட பிரதான முகாமைத்துவத் திறனாக **அமையாதது** எது?

(1) தொழில்நுட்பத் திறன்கள்
(2) மானிடத் திறன்கள்
(3) எண்ணக்கருத் திறன்கள்
(4) பேரம்பேசும் திறன்கள்

**1.3** பின்வருவனவற்றுள் அதிகாரவியலின் பண்பியல்பாக (characteristic of Bureaucracy) அமைவது எது?

(1) சிறப்புத்தேர்ச்சி (2) நெகிழ்ச்சித்தன்மை

(3) முறைசாரா முறைமை (4) குறுங்காலத் தொழில்

**1.4** பின்வருவனவற்றுள் முகாமைத்துவத்திற்கான அளவுசார் அணுகுமுறை ஒன்றாக **அமையாதது** எது?

(1) நேர்கோட்டு நிரலாக்கம் (Linear programming)

(2) வலையமைப்பு மாதிரி (Network model)

(3) இருப்பு மாதிரி (Inventory model)

(4) ஊக்குவிப்பு மாதிரி (Motivational model)

**1.5** பின்வருவனவற்றுள் தொடர்பாடலுக்கான தடை ஒன்றாக **அமையாதது** எது?

(1) பௌதிகத் (physical) தடை (2) மக்கள்சார்ந்த (demographic) தடை

(3) பண்புத் (attribute) தடை (4) மொழித் (language) தடை

*வினா இல.**1.6** தொடக்கம் **1.10** வரையில் தரப்பட்டுள்ள பின்வரும் கூற்றுக்கள் ஒவ்வொன்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** என்பதைக் கூறுக. உங்களது விடையினை (சரியானது / தவறானது) உங்களுக்குத் தரப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் வினா இலக்கத்தை எழுதி, அதன் எதிரே எழுதுக.*

**1.6** உற்பத்தித்திறன் என்பது வினைத்திறனினதும் விளைதிறனினதும் சேர்க்கையின் ஓர் விளைவாகும்.

**1.7** மூளையை உருட்டுதல் (Brainstorming) என்பது குழு உறுப்பினர்கள் வாய்மொழிமூலம் எண்ணங்கள் அல்லது மாற்றுத் தீர்மானங்களைப் பரிந்துரைசெய்கின்ற ஓர் குழுத் தீர்மானமெடுத்தல் நுட்பமாகும்.

**1.8** அடிப்படைத் தொடர்பாடல் மாதிரியிலுள்ள குறியீடு அகற்றுதல் (Decoding) என்பது எண்ணங்களைக் குறியீடுகளாக மாற்றுகின்ற செயன்முறையாகும்.

**1.9** கீழ்நோக்கிய தொடர்பாடலில் தகவலானது கீழ்நிலை ஊழியர்களிடமிருந்து மேல்நிலை ஊழியர்களுக்குச் செல்கிறது.

**1.10** நிறுவனத்தின் தூரநோக்கு (Vision) ஆனது கலாசார வலையின் ஓர் கூறாக இருக்கிறது.

(ஒவ்வொன்றிற்கும் 02 புள்ளிகள் வீதம், மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# பகுதி B

ஐந்து (05) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 02

பாரம்பரிய முகாமைத்துவக் கோட்பாட்டில், ஊழியர் குழுக்களைக் கட்டமைத்தல் மற்றும் ஒழுங்கமைத்தலில் முகாமையாளர்கள் பின்பற்ற வேண்டிய 14 கோட்பாடுகளை ஹென்றி பயோல் (Henry Fayol) அறிமுகப்படுத்தியுள்ளார்.

**நீங்கள் செய்யவேண்டியது:**

ஹென்றி பயோலினால் அறிமுகப்படுத்தப்பட்ட முகாமைத்துவக் கோட்பாடுகள் இரண்டினை (02) **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 03

நிறுவனமொன்றின் தகவல் பாய்ச்சலானது கீழிருந்து மேல்நோக்கிச் செல்வதற்கான தேவையினை யப்பானிய முகாமைத்துவப் பாணி (style) வலியுறுத்துகின்றது.

**நீங்கள் செய்யவேண்டியது:**

யப்பானிய முகாமைத்துவப் பாணியுடன் இணைந்த பிரதான நடவடிக்கைகள் ஐந்தினைக் (05) **குறிப்பிடுக.** (05 புள்ளிகள்)

## வினா 04

நிறுவனக் கட்டுப்படுத்தல் என்பது நிறுவனமொன்றினது முகாமைத்துவத்தின் பிரதான இலக்கு நோக்கிய தொழிற்பாடு ஒன்றாகும். கட்டுப்படுத்தல் செயன்முறை பல்வேறு படிமுறைகளுடன் சம்பந்தப்பட்டது.

**நீங்கள் செய்யவேண்டியது:**

கட்டுப்படுத்தல் செயன்முறையின் படிமுறைகளை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 05

நிறுவன கலாசாரமானது நிறுவனத்தின் வரலாறு, உற்பத்திப்பொருள், சந்தை, தொழில்நுட்பமும் தந்திரோ பாயமும், ஊழியர்களின் வகை, முகாமைத்துவப் பாணி மற்றும் தேசிய கலாசாரம் ஆகியவற்றின் தாக்கத்திற்கு உள்ளாகலாம்.

**நீங்கள் செய்யவேண்டியது:**

நிறுவனமொன்றில் விளைதிறன்மிக்க கலாசாரம் (effective culture) ஒன்றினை உருவாக்குவதற்கான வழிவகைகள் இரண்டினை (02) **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 06

நிறுவனங்களால் ஏற்கப்பட்டுப் பின்பற்றப்படுகின்ற முகவராண்மைக் கோட்பாடும் (Agency Theory) செயன்முகமைக் கோட்பாடும் (Stewardship Theory) நிறுவன ஆளுகைக் கோட்பாடுகளாகக் கருதப்பட முடியும். இந்த முகவராண்மைக் கோட்பாடும் செயன்முகமைக் கோட்பாடும் ஒற்றுமைகளைக் கொண்டிருக் கின்ற அதே வேளை வேறுபாடுகளையும் கொண்டிருக்கின்றன.

**நீங்கள் செய்யவேண்டியது:**

முகவராண்மைக் கோட்பாட்டிற்கும் செயன்முகமைக் கோட்பாட்டிற்குமிடையிலான வேறுபாடுகள் ஐந்தினை (05) **குறிப்பிடுக.** (05 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## பகுதி C

மூன்று (03) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 30 புள்ளிகள்)

### வினா 07

ஒழுங்கமைத்தல் என்பது நிறுவனத்தினுடைய இலக்குகளை வினைத்திறனாகவும் விளைதிறன்மிக்க வகையிலும் அடைந்துகொள்ளக்கூடிய வகையில் நிறுவனத்தினுடைய உறுப்பினர்களிடையே வேலைகள், அதிகாரங்கள், வளங்கள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்தி, ஒதுக்கீடு செய்கின்ற செயன்முறையாகும். நிறுவனக் கட்டமைப்பு என்பது ஒழுங்குபடுத்தல் செயன்முறையின் விளைவு ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) நிறுவனம் ஒன்றிற்கு விளைதிறன்மிக்க ஒழுங்கமைத்தல் (effective organizing) செயன்முறையொன்று ஏன் முக்கியமானது என்பதற்கான காரணங்கள் மூன்றினை (03) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) தாய (matrix) அடிப்படையிலான நிறுவனக் கட்டமைப்பொன்றின் அனுகூலங்கள் இரண்டையும் (02) பிரதிகூலங்கள் இரண்டையும் (02) **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 08

தலைமைத்துவம் என்பது பின்பற்றுவோர் அல்லது நிறுவனத்தின் ஏனைய உறுப்பினர்கள் மீது செல்வாக்குச் செலுத்துகின்ற மற்றும் வழிகாட்டல் வழங்குகின்ற தனி ஒருவரின் அல்லது தனி நபர்களைக் கொண்ட குழு ஒன்றின் ஆற்றல் ஆகும். இது செயலாற்றுகையை அதிகரிப்பதுடன் வியாபார நோக்கங்களை அடைந்து கொள்வதற்கும் இடமளிக்கிறது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) தலைமைத்துவத்தின் பிரதான தொழிற்பாடுகள் மூன்றினை (03) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) சர்வாதிகாரத் (autocratic) தலைவருக்கும் சனநாயகத் (democratic) தலைவருக்குமிடையிலான வேறுபாடுகளை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 09

ஊக்கப்படுத்தல் (motivation) என்பது நபர் ஒருவரை இலக்கு நோக்கி நகரச்செய்கின்ற ஓர் உள்ளகச் செயன்முறை ஆகும். இது சிறந்த செயலாற்றுகைக்கு வழிவகுக்கின்ற ஓர் மாறியாகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) நிறுவனம் ஒன்றிற்கு ஊக்கப்படுத்தல் ஏன் முக்கியமனது என்பதற்கான காரணங்கள் மூன்றினை (03) **ஆராய்க.** (06 புள்ளிகள்)

(b) மக்கிளான்ட்டின் கையகப்படுத்தப்பட்ட தேவைக் கோட்பாட்டில் (McClelland's Acquired Needs Theory) அடையாளங் காணப்பட்ட பின்வரும் தேவைகளை **விபரிக்குக**:

(i) அடைவுக்கான தேவை (Needs for achievement) (02 புள்ளிகள்)

(ii) இணைப்புக்கான தேவை (Need for affiliation) (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

## பகுதி D

ஒரு கட்டாய வினா

(25 புள்ளிகள்)

### வினா 10

நாடுபூராகவும் சுமார் 800 இற்கும் மேற்பட்ட களஞ்சியங்களைக் கொண்டுள்ள **வரையறுக்கப்பட்ட றீட்ஸ் பொதுக் கம்பனி (Treats PLC)** ஆனது சொக்கலேற்றுகளை உற்பத்திசெய்து சில்லறையாக விற்பனை செய்கின்ற ஓர் முன்னணி நிறுவனம் ஆகும். இது தனது வியாபாரத்தை இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு விரிவாக்கம் செய்கின்றது. **வரையறுக்கப்பட்ட றீட்ஸ் பொதுக் கம்பனி** ஆனது சொக்கலேற்றுப் பிரியர்களைத் திருப்திப்படுத்துவதன் மூலம் பணத்திற்கான பெறுமதியை வழங்குகின்றது. **வரையறுக்கப்பட்ட றீட்ஸ் பொதுக் கம்பனி** தொலைநோக்குப் பார்வையுடனான தனது விளைதிறன்மிக்க செயற்பாடுகளின் ஊடாக உள்ளக மற்றும் வெளிவாரி வாடிக்கையாளர்களை மகிழ்ச்சியாக வைத்திருப்பதை வலியுறுத்துகிறது. இக்கம்பனி தனது செயற்பாடுகள் விளைதிறன்மிக்கதாகவும் வினைத்திறனுடையதாகவும் இருப்பதற்கு மாற்ற முகாமைத்துவம் (change management) மற்றும் புத்திசாதுரியமான தீர்மானமெடுத்தல் என்பவற்றைத் தழுவுவது முக்கியமானது என்பதை அடையாளம் கண்டுள்ளது.

**வரையறுக்கப்பட்ட றீட்ஸ் பொதுக் கம்பனி**யின் துரித விரிவாக்கமானது கம்பனியினால் அதன் சகல செயற்பாடுகளும் கணினிமயப்படுத்தப்பட வேண்டிய தேவையை வலியுறுத்துகின்றது. அதனை கூடிய விரைவில் செய்யுமாறு நிறுவனத்திற்கு அண்மையில் நியமனம் செய்யப்பட்ட ஆலோசகரால் பணிப்பாளர் சபைக்கு அறிவுறுத்தப்பட்டது. எனவே, சபையானது, தற்போதைய கையினால் செய்யப்படும் முறைமையிலிருக்கின்ற சகல செயற்பாடுகளையும் கணினிமயப்படுத்தப்பட்ட செயன்முறையில் முன்னெடுப்பதற்குத் தேவையான தகவல்களை வழங்குமாறு முகாமைத்துவத்திடம் கோரியிருந்தது. கம்பனியானது அதன் சகல செயற்பாடுகளையும் உடனடியாக கணினிமயப்படுத்தப்பட்ட முறைமைக்கு மாற்றுவதை நோக்கி நகருவதற்கு அதன் ஊழியர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். அத்துடன் இம்மாற்றத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தகுதிவாய்ந்த ஊழியர்கள் பற்றாக்குறையாக உள்ளனர் என்பதை, கம்பனியில் தகவல் தொழில்நுட்பவியல் பிரிவின் முகாமையாளர் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், **வரையறுக்கப்பட்ட றீட்ஸ் பொதுக் கம்பனி**யின் முகாமைக்கும் ஊழியர்களுக்குமிடையில் தொடர்பாடல் இடைவெளி காணப்படுவதும் அவதானிக்கப்பட்டுள்ளது. **வரையறுக்கப்பட்ட றீட்ஸ் பொதுக் கம்பனி**யில் முன்மொழியப்பட்டுள்ள கணினிமயப்படுத்தப்படும் செயற்றிட்டத்திற்கு வசதியளிப்பதற்கான திட்டமிடல் செயன்முறையினை முன்னெடுப்பதற்கு நிபுணர்களைக் கொண்ட அணி ஒன்றினை சபை நியமித்திருக்கிறது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) **வரையறுக்கப்பட்ட றீட்ஸ் பொதுக் கம்பனி**யில் காணப்படுகின்ற விளைதிறன்மிக்க திட்டமிடலுக்கான (effective planning) தடைகள் நான்கினை (04) **விபரிக்குக.** (08 புள்ளிகள்)

(b) திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது தடைகளைத் தாண்டக்கூடிய (overcome the barriers) வழிகள் மூன்றினைக் (03) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(c) மாற்றத்திற்கான தடைகளைத் தாண்டுவதற்காக **வரையறுக்கப்பட்ட றீட்ஸ் பொதுக் கம்பனி**யின் பணிப்பாளர் சபையினால் பின்பற்றப்படக்கூடிய முறைகள் மூன்றினை (03) **ஆராய்க.** (06 புள்ளிகள்)

(d) **வரையறுக்கப்பட்ட றீட்ஸ் பொதுக் கம்பனி** தொடர்பான "பெறுமதிச் சங்கிலியின் (Value Chain)" முதன்மை நடவடிக்கைகள் நான்கினை (04) **விபரிக்குக.** (08 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி D முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |